திரு. ஜி. ஜி. குருமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வெட்டுக்கூலி இல்லையென்றாலும், லாரி வாடகையாவது ஏற்றுக்கொள்வதற்கான பரிந்துரைகளை அரசாங்கம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவரவர்களே, மகாராஷ்டிரா மாநிலத்தில் சர்க்கரை ஆலை—கரும்பு வெட்டுச் செலவு, போக்குவரத்துச் செலவு ஆகியவற்றை ஆலைகளே ஏற்றுக்கொள்வதாகத் தெரிகிறது. தமிழகத்திலுள்ள அனைத்துக் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை ஆலைகளிலும் கரும்பு எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவை தூரத்தின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு ஆலையே ஏற்கிறது. அதாவது வயலிலிருந்து ஆலைக்குள்ள நாற்பது கிலோ மீட்டருக்கு உட்பட்ட தூரத்திலிருந்து பெறக் கூடிய கரும்புக்கு மட்டும்தான் விவசாயிகளே வாகன வாடகையை ஏற்க வேண்டும். ஆலையிலிருந்து நாற்பது கிலோ மீட்டருக்கு அதிகம் உள்ள தூரத்திற்கு உண்டான போக்குவரத்துச் செலவினை ஆலையே தன் செலவில் மானியமாக ஏற்றுக் கொள்கிறது.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த லாரி வாடகையைப் பொறுத்தமட்டில், மராட்டியத்தில் பூரா வாடகையையுமே ஆலை நிர்வாகமே ஏற்றுக்கொள்கிறது. தமிழகத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்கிறார்கள்; ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு விவசாயிகளே கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே, அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய இந்த 250 ரூபாயிலே லாரி வாடகையைக் கொடுப்பதினால் விவசாயிகளுக்கு அந்த விலை குறையக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. எனவே, மராட்டியம் போல தமிழகத்திலேயும் அந்த லாரி வாடகை முழுவதையுமே ஆலை நிர்வாகமே ஏற்றுக் கொள்வதற்கான முறையில் அரசு உரிய நடவடிக்கையை எடுத்து, விவசாயிகளுக்கு உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவரவர்களே, நாற்பது கிலோ மீட்டர் வரை விவசாயிகளே ஏற்கிறார்கள். அதற்கு மேலே இருந்தால்—நாற்பது கிலோ மீட்டருக்கு மேல் உள்ள தூரத்திற்குப் போக்குவரத்துச் செலவை ஆலையே ஏற்றுக் கொள்கிறது.

தென்னாற்காடு மாவட்டத்தில் கரும்புசாலை திட்டத்தின்கீழ் உள்ள சாலைகள்

* 3313—திரு. சி. கோவிந்தராஜன் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் கரும்புசாலை திட்டத்தின் கீழ் உள்ள சாலைகள் எத்தனை?

திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை கடலூர் மாவட்டக் கூட்டத்தில் வந்தபோது அங்கே வந்த ஆலோசனையில் மாவட்ட ஆட்சித் தலைவரும், மற்றவர்களும் ஒன்றும் செய்ய முடியாத நிலைமையில் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து ஒரு குழுவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து பேசி, அதன்மூலமாக நடவடிக்கை எடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அந்த முடிவு முடிவு அங்கேயிருந்து அரசுக்கு வந்திருக்கிறதா ? அப்படிப்பட்ட அங்கே எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் நாங்கள் முதலமைச்சர் அவர்களைச் சந்திக்க இருக்கிறோம். அதற்கான நடவடிக்கையெடுத்து முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போடலாம். இருப்பினும் அந்தச் சாலைகளை, நம்முடைய தலைமைப் பொறியாளர், நெடுஞ்சாலை, கிழக்கு கடற்கரை சாலை மற்றும் கிராமச் சாலைகள் அவர்களே, இந்தப் பிரச்சினை தீர்க்கிறவரையில் பராமரிக்கலாம் என்ற குறிப்பை அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இந்தச் சாலைகள் பராமரிக்கப்பட நடவடிக்கையெடுக்கப்படும்.

பரம்பிக்குளம், ஆளியாறு நீர்ப்பாசனத் திட்டம்.

*870— திரு. வி. கே. சின்னசாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) பரம்பிக்குளம், ஆளியாறு நீர்ப்பாசனத் திட்டத்தில் பெரியார் மாவட்டம் புஞ்சை புளியம்பட்டி மற்றும் நம்பியூர் வறட்சிப் பகுதிகளை சேர்த்துக்கொள்ளும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.